*3*

# கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி விசுவாசிப்பது என்ன

*கிறிஸ்தவர்கள் "முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகள்" என்ன (காண்க லூக்கா 1:1; KJV)? நமது முழு இருதயத்தோடு நாம் என்னத்தை விசுவாசிக்க வேண்டும்? இந்தத் தொடர் பாடத்தில் கிறிஸ்தவர்கள் மிகவும் பலமாய் விசுவாசிக்கிற சில உண்மைகளை ஒருமுகப்படுத்துகிறது.*

*நாம் தேவனில் விசுவாசிப்பதைப் போலவே, கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்துவில் உள்ள இந்த விசுவாசமே கிறிஸ்தவர்களை மற்ற மனிதவர்க்கத்திலிருந்து பிரித்துக் காட்டுகிறது.*

*கிறிஸ்துவைக் குறித்து நாம் விசுவாசிப்பது என்ன? அவரைக் குறித்து ஜனங்கள் பல்வேறுபட்ட கண்ணோட்டமுடையவர்களாய் இருக்கிறார்கள். சிலர் அவர் ஒரு நல்ல மனிதர் என்று விசுவாசிக்கின்றனர், மற்றும் ஒரு தீர்க்கதரிசியாக, ஒரு வேளை சீர்சிருத்தவாதியாக, அநேகமாக ஒரு போதகராகவோ (ரபீ) அல்லது ஆசிரியராக (போதகர்) வோ கண்ணுறுகின்றனர், ஆனால் தெய்வீகம் நிறைந்த தேவனுடைய குமாரனாக மட்டும் காணத்தவறுகின்றனர். நாம் விசுவாசிப்பது என்ன? திருமறை என்ன சொல்லுகிறதோ அதை விசுவாசிக்கிறோம் - எனவே இயேசு கிறிஸ்துவைக் குறித்து திருமறை என்ன சொல்லுகிறது என்று ஆராய்வோமாக. நாம் அவரைக் குறித்து விசுவாசிக்கிற சத்தியங்கள் இவைகளே.*

## இயேசு கிறிஸ்து மெய்யான மனுஷீகம் நிறைந்தவராயிருந்தார்

*இயேசு ஒரு வரலாற்று உருவமாக வாழ்ந்தவர். முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிலர் கிறிஸ்தவம் தோன்றிய பின்பு சந்தேகத்தை எழுப்பினர். அவர்கள் மாமிசம் தீமையானது[1] என்றும் தெய்வம் மாமிசத்தில் வாசம் பண்ணுவதில்லை என்றும் நம்பினார்கள்; ஆகையால், அவர்கள் உண்மையான மனுஷீகத்தில் இயேசு இருக்க வில்லை என்றும், அவர் மனுஷ சரீரத் தோற்றத்தைமட்டுமே கொண்டிருந்தார் என்றும் கூறினர்.[2]*

*ஒருவேளை இப்படிப்பட்ட நம்பிக்கைகளை முறியடிக்கவே அப்போஸ்தலர்களும் ஆரம்ப கால சுவிசேஷகர்களும் இயேசு தெய்வம்மட்டுமல்ல அவர் மனுஷீகமானவரும்கூட என்று வலியுறுத்தியிருக்கலாம்; அவருடைய சரீரம் மாமிசமானதே. ஆதியிலிருந்த அந்த "வார்த்தை" (யோவான் 1:1)*

*"மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள் வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்று யோவான் எழுதினார் (யோவான் 1:14).*[3] *அப்போஸ்தலனாகிய யோவான் 1 யோவான் 1:1, 2 ல், சாட்சியிட்டு தானும் மற்றவர்களும் "ஜீவவார்த்தையாகிய" அவரை "கண்டு" "கேட்டு" மற்றும் [தங்களுடைய] "கைகளினாலே தொட்டு" அவர் "பிதாவினிடத்திலிருந்தவர் மற்றும் [அவர்] அவர்களுக்கு வெளிப்படுத்தினார்" என்று குறிப்பிட்டார். பவுல்,*

> *... கிறிஸ்து இயேசு ... தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:5-8; எபிரெயர் 2:5-18யும் காண்க).*

*சுவிசேஷப் பதிவேடுகள் இயேசுவின் தெய்வீகத்தைப் போலவே அவருடைய மனுஷீகத்தையும் வலியுறுத்துகின்றன. அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் (கலாத்தியர் 4:4) - மற்ற மனுஷர்கள் பிறப்பது போலவே - குறிப்பிட்ட வரலாற்றுக்காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் (லூக்கா 2:1-7). மற்ற குழந்தைகளைப் போலவே, அவரும் சரீரவளர்ச்சியைப் பெற்று, மனரீதியிலும் சமுதாய ரீதியிலும் வளர்ந்தார் (லூக்கா 2:52). அவர் தமது குடும்பத்தில் ஒரு அங்கமாக, குறிப்பிட்ட ஒரு பட்டணத்தில், ஒரு தொழிலையும் செய்தார் (மாற்கு 6:1-4). "அவருக்கு களைப்பும் தாகமும் மற்ற மனுஷரைப் போலவே பசியுமிருந்தது"*[4] *(மத்தேயு 4:2; யோவான் 4:6, 7; 19:28 ஆகியவற்றைக் காண்க). மற்ற ஜனங்களைப்போல, அவரும் அழுதார் (யோவான் 11:35); கோபப்பட்டார் (மாற்கு 3:5); சில வேளைகளில் அவர் கவலைப் படவும் மன அமைதி குறைந்தும் காணப்பட்டார் (மாற்கு 14:33, 34; 15:34). ஒவ்வொரு மனுஷனும் மரிப்பதைப் போலவே, அவரது மாமிச வாழ்க்கை மரணத்தில் முடிந்தது. எபிரெய எழுத்தாளர், "எவ்விதத்திலும் அவர் தமது சகோதரருக்கு [மனுஷருக்கு] ஒப்பாக வேண்டியிருந்தது" என்று சரியாய்ச் சொன்னார் (எபிரெயர் 2:17).*[5] *ஆகிலும், ஒருவகையில், அவர் வித்தியாசப்பட்டிருந்தார்: அவர் மனுஷீகத்தில் இருந்து பாவம் செய்ய ஏதுவானவராகக் காணப்பட்டும், சோதனையில் அவர் விழுந்து எவ்விதப் பாவத்துக்கும், தம்மை ஒப்புக் கொடுக்கவில்லை (எபிரெயர் 4:15).*

*இயேசு உண்மையான மனுஷீகத்தில் இருந்தபடியால், அவர் நம்மோடு இரக்கங்காட்டி பரிதபிக்கவும் பரலோகத்திலே நமக்காக பிரதான ஆசாரியனாகவும் ஊழியம் செய்கிறார் (எபிரெயர் 2:17, 18; 4:14-16). நமக்கு முன்மாதிரியைக் காட்டி "அவருடைய அடிச்சுவடுகளைப்" பின்பற்றும்படிச் செய்தார் (1 பேதுரு 2:21).*

## இயேசு கிறிஸ்து தெய்வீகம் நிறைந்தவர்

*இயேசு தேவனுடைய குமாரன். அவர் பூமிக்கு வந்த போது, அவர்*

தெய்வீகமும் மனுஷீகமும் உடையவராய் இருந்தார்.[6] இயேசுவின் தெய்வீகத்தில் கொண்டுள்ள விசுவாசமே மற்றவர்களிலிருந்து கிறிஸ்தவர்களை வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது. இயேசு என்று பெயர் பெற்ற ஒரு மனுஷன் இருந்தார், அவர் நாசரேத்தில் வளர்ந்தார், அவர் நன்கு அறியப்பட்ட யூதமதப் போதகராயிருந்தார், கடைசியில் ரோமர்களாலே சிலுவையில் அறையப்பட்டார் என்கிற உண்மைகளை இன்றைக்கு மறுதலிப்பவர்கள் ஒரு சிலரே. பெரும்பாலானவர்கள் இன்று இயேசுவின் மனுஷீகத்தை ஏற்றுக் கொள்கின்றனர், ஆகிலும் ஏதோ ஒரு வகையில், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களே அவர் மாமிசத்தில் வந்த தேவன் என்று விசுவாசிக்கின்றனர்.

வேதப் புத்தகத்தை தேவனுடைய ஏவப்பட்டப் புத்தகமாக ஏற்றுக் கொள்பவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்றும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இயேசுவின் ஞானஸ்நானத்துக்குப் பின்பு, பரலோகத்திலிருந்து தேவன் பேசிய "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்பதை வேத வசனங்கள் பதிவு பண்ணியுள்ளது (மத்தேயு 3:17). மறுரூப மலையில், இயேசுவைக் குறித்து தேவன் மறுபடியும் பேசி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவி கொடுங்கள்!" என்றார் (மத்தேயு 17:5).

மாற்கு 1:1 "இயேசு கிறிஸ்து, தேவனுடைய குமாரன்" என்று சுட்டிக் காட்டுகிறது. யோவான் தனது சுவிசேஷப்பதிவேட்டை, நிறைவு செய்து, எழுதியதாவது,

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30, 31; எபிரெயர் 1 யும் காண்க).

எத்தியோப்பிய மந்திரி பிலிப்புவினிடத்தில் உபதேசத்தைக் கேட்ட போது எருசலேமிலிருந்து காசாவுக்குப் போகிற வழியில், மறுமொழியாக "இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" என்று சொன்னான் (நடபடிகள் 8:37).

இயேசு தேவத்துவத்தில் ஒருவர் என்பதை சிலர் மறுதலித்து அவர் ஒருபோதும் தம்மைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி உரிமை கொண்டாடவில்லை என்கின்றனர். ஆகிலும் சுவிசேஷப் பதிவுகள் இயேசு தமது தெய்வீகத்தை உரிமையுடன் பேசினார் என உறுதிப்படுத்துகிறது. யோவான் 8:58 ல் தாம் ஆபிரகாமுக்கு முன் இருந்ததாகச் சொல்லுகிறார். அவர் அப்படி இருந்ததால் மட்டுமே அப்படியொரு உரிமையை நியாயப்படுத்தியிருக்க முடியும்.

யோவான் 10:32-38ன் படி, இயேசு தம்மை "தேவன்" என்று சொன்னபடியால் அவருடைய எதிரிகள் அவரை தேவதூஷணம் சொன்னதாகக் குற்றஞ் சாட்டினர். *இயேசு தாம் தேவனுடைய குமாரனென்றுச் சொல்லி உரிமை கொண்டாடியதை மறுதலிக்கவில்லை!* மாறாக, இப்படி தாம் உரிமை கோரியதை சரியென்றே வாதிட்ட அவர், "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறார்" என்றார்.

யோவான் 8:24 ல் இயேசு சொன்னார், "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்." "அவர்" எனும் வார்த்தை புதிய அமெரிக்க ஸ்டாண்டர்ட் மொழிபெயர்ப்பில் வலபுற சாய்வு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது, அது வாசிக்கிறவர்கள் புரிந்து கொள்ள ஏதுவாக மொழிபெயர்த்தவர்களால் சேர்க்கப்பட்ட வார்த்தை. மூலபாஷயில், இயேசு, "நான் இருக்கிறேன்" என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், "உங்கள் பாவங்களிலே நீங்கள் சாவீர்கள்" என்று சொன்னார். அவர் பயன்படுத்திய "இருக்கிறேன்" எனும் பதம் (Gk.: *ego eimi*). அவருடைய போதகத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு தேவன் பழைய ஏற்பாட்டில் தம்மை "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று சொன்னதை நினைவுபடுத்தக் கூடியதாக இருந்தது (யாத்திராகமம் 3:14). இந்த சொற்றொடர் செப்துவஜிந்த் எனும் மூலப்பாஷை மொழிபெயர்ப்பில் இயேசு யோவான் 8:24 ல் பயன்படுத்திய வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேவின் (இந்த) உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் உடனடியாக இயேசு தம்மை தேவன் என்று உரிமையுடன் பேசியதை உணர்ந்திருப்பார்கள்.

இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என்று குறிப்பிட்டதன் ஒரு விளைவு அவர் தேவனுடைய குணாதிசயங்களை பகிர்ந்து கொள்வதைக் காட்டுகிறது?[7] இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனும் விசுவாசத்தின் மற்றொரு பயன்பாடு அது இரட்சிப்புக்கு அவசியமானது (யோவான் 3:16; 5:24; 8:24; நடபடிகள் 8:36, 37; 16:30-34; ரோமர் 10:9, 10). பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கையிட்டது போலவே, (மத்தேயு 16:16), நாம் இரட்சிக்கப்பட வேண்டுமானால் இயேசு தேவனுடைய குமாரன் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்.[8]

## இயேசு கிறிஸ்து மேசியாவாகவும், கிறிஸ்துவாகவும், இருந்தார், இருக்கிறார்

இயேசு வரவிருந்த இராஜா. யூதர்கள் மேசியாவை ("அபிஷேகம் பண்ணப்பட்டவரை")[9] எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசு பூமிக்கு வருவார் என்று உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் மேசியாவின் வருகையை எதிர்பார்க்கச் செய்திருந்தபடியே அதன் நிறைவேற்றமாக இயேசு பூமிக்கு வந்தார்:

- அவர் மோசேயைப் போன்ற தீர்க்கதரிசியாக வந்தார் (உபாகமம் 18:18, 19; நடபடிகள் 3:21-24).
- அவர் தாவீதின் சிங்காசனத்தில் உட்காரும்படி இராஜாவாக வந்தார் (2 சாமுவேல் 7:12, 13, 16; சங்கீதம் 89:3, 4, 26-29; லூக்கா 1:31-33).
- அவர் "அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன்," என்றும் அவர் நியாயத்தோடும் நீதியோடும் ஆளுகை செய்வார் என்றும் அழைக்கப்படத் தக்கவராய் வந்தார் (ஏசாயா 9:6, 7).
- அவர் தாவீதின் சந்ததியில் நீதியுள்ள கிளையாகவும் இராஜாவாகவும்

ஆளுகை செய்யும்படிவந்தார் (எரேமியா 23:5, 6).

- அவர் பெத்லகேமிலே பிறந்து இஸ்ரவேலை ஆளுகை செய்யும்படி வந்தார் (மீகா 5:2).

இயேசு பூமியில் ஊழியஞ் செய்து கொண்டிருந்த காலத்தில், யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் தாமே என்று அறிவித்தார். கிணற்றடியில் சமாரிய ஸ்திரீ "(கிறிஸ்து என்னப்படுகிற) மேசியா வருகிறார் என்று அறிவேன்; அவர் வரும்போது, எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்றாள். அதற்கு இயேசு, உன்னுடன் பேசுகிற நானே அவர் என்றார் (யோவான் 4:25, 26). பிரதான ஆசாரியர்களால், "நீ ... கிறிஸ்துதானா?" என்று கேட்கப்பட்ட போது அதற்கு இயேசு, "நான் அவர்தான்" என்றார் (மாற்கு 14:61, 62). பிலாத்துவினால் அவர் கேள்விகேட்கப்பட்டபோது, "நீ யூதருடைய இராஜவா?" என்றான். அதற்கு அவர், அதை உறுதிப்படுத்தினார் (மாற்கு 15:2). இயேசு பரமேறிச் சென்றபின், பேதுரு, "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த - இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்" என்றார் (நடபடிகள் 2:36). கிறிஸ்து அல்லது மேசியாவாகிய இயேசுதான், இஸ்ரவேல் தேசத்தாராகிய, தமது ஜனங்களுக்காக, தேவன் வைத்திருந்த மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தாம் விரும்பிய பலன்.

## இயேசு கிறிஸ்து கர்த்தராக, இருந்தார், இருக்கிறார்

பேதுரு இயேசுவை தேவன் கிறிஸ்துவாக மட்டுமின்றி, "ஆண்டவருமாக்கினார்" என்று சொன்னார் (நடபடிகள் 2:36).[10] கர்த்தராகிய அவர், நம்முடைய எஜமானராகவும், ஆளுனராகவும், இராஜாவாகவும் இருக்கிறார். உண்மையில் அவர், "நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 6:15).[11] "வானத்திலும் பூமியிலும் அவருக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது." (மத்தேயு 28:18). சிலுவையின் மேல் கூட பிலாத்து எழுதிவைத்த வாசகத்தில் தன்னை அறியாமலேயே இயேசுவின் கர்த்தத்துவத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டிருந்தான். அதில் குறிப்பிடப்பட்டதாவது; "இவன் யூதருடைய இராஜவாகிய இயேசு" (மத்தேயு 27:37). கிறிஸ்தவர்களுக்கு "கர்த்தராகிய கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்" என்று சொல்லப்பட்டது (1 பேதுரு 3:15).

பழைய ஏற்பாட்டில், தேவனுடைய தனிப்பட்ட பெயர் "யாவே" ("யெகோவா"; KJV). எனப்பட்டது. செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் "யாவே"யின் இடத்தில் குரியாஸ் எனும் கிரேக்க வார்த்தை இடம்பெற்றது. புதிய ஏற்பாட்டு ஆரம்ப கால மக்கள் இயேசு "கர்த்தர்" என்று அழைக்கப்பட்ட போதெல்லாம் (Gk.: *kurios* என்று), எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும் தமது சிருஷ்டிகள் எல்லாவற்றையும் ஆளுகை செய்பவருமாகிய கர்த்தராகிய தேவனோடு அவரை ஒப்பிட்டுப் பார்த்தனர்.

இன்று ஜனங்கள் இயேசுவை கர்த்தர் என்று ஏற்றுக் கொண்டு இரட்சிப்படைவது அவசியமாகும் (ரோமர் 10:9, 10). கடைசி நாளில்

அநேகருக்கு மிகவும் தாமதமானாலும், ஒவ்வொருவரும் அவரை கர்த்தர் என்று அறிக்கையிட்டே ஆக வேண்டும் (பிலிப்பியர் 2:11). இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்யும் ஜனங்கள் அவரைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக *செயல் படவும்*, தங்கள் வாழ்நாளெல்லாம் ஒவ்வொரு நாளும் அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிய ஏதுவாக அவருக்கு முன்பாக பணிந்து குனியுமளவுக்கு இது மிகவும் முக்கியமானது. "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லியும், நான் சொல்லுகிறபடி செய்யாமல் போகிறதென்ன?" என்று இயேசு கேட்டவர்களைப் போல இருக்காதபடி இருக்க நாம் முயற்சிக்க வேண்டும் (லூக்கா 6:46; மத்தேயு 7:21யும் காண்க).

## இயேசுவே இரட்சகராக, இருந்தார், இருக்கிறார்

"இயேசு" என்பதற்கு "இரட்சகர்" என்று பொருள். "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்பதால் (மத்தேயு 1:21). நமது கர்த்தருக்கு இந்த பெயர் கொடுக்கப்பட்டது. "இழந்து போனதைத்தேடவும் இரட்சிக்கவுமே" தாம் வந்ததாக அவர் சொன்னார் (லூக்கா 19:10[12]). அவர் வெறும் "இரட்சகர்" மாத்திரமல்ல; அவர் *மட்டுமே* இரட்சகர். அவர் "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவான் 14:6). அவரைக் குறித்து பேதுரு, "அவராலேயன்றி வெறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்றான் (நடபடிகள் 4:12).

இயேசு கிறிஸ்துவுக்குள்ளேயும் அவர் மூலமாகவும் மட்டுமே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லும்போது அது மிகவும் குறுகிய - மனப்பான்மையைக் காட்டுவது போல இருக்கக்கூடும். எந்த வார்த்தையில் கூறினாலும் உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் 30 சதவீகிதம் மட்டுமே "கிறிஸ்தவன்," என்பது முடிவாகத் தெரிகிறது. எப்படியிருப்பினும், நம்மை குறுகிய மனப்பாங்கு உடையவர்களென்று குறிப்பிட்டாலும் கூட, திருமறையை தேவனுடைய வசனம் என்று ஏற்றுக் கொள்கிற நாம், கிறிஸ்துவில் விசுவாசமில்லாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது என்கிற உண்மையையும் ஏற்றுக்கொண்டு, பிரசங்கிக்க வேண்டும்.

## இயேசு நமது பரிகார பலியாக இருந்தார், இருக்கிறார்

இயேசு "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29). அவர் "அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டார்" (எபிரெயர் 9:28), பாவங்களினிமித்தம் "ஒரே தரம் தம்மைத்தாமே பலியாக்கினார்" (எபிரெயர் 7:27) அவர் சிலுவையிலே மரித்ததினாலும், சிலுவையிலே சிந்திய இரத்தத்தினாலும் மட்டுமே ஜனங்களுடைய பாவங்கள் கழுவப்படும் (எபேசியர் 1:7; வெளிப்படுத்தின விசேஷம் 1:5; 7:14).

## இயேசு கிறிஸ்து பரலோகத்திலே நித்தியத்துக்கும் தமது பிதாவோடு இருந்தார், இருக்கிறார்

*இயேசு நித்தியமானவர். அவர் பூமியிலே மனுஷனாக வருவதற்கு முன்பே, பரலோகத்திலே பிதாவோடு இருந்தார் - சிருஷ்டிப்பின் போதும் அவர் அவருடன் இருந்தார். நாம் வாசிக்கிறதாவது,*

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவான் 1:1-3).*

*தொடர்ந்து யோவான் "அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்று குறிப்பிடுகிறார் (யோவான் 1:14). ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு, இயேசு கிறிஸ்து மனுஷ சாயலாக்கப்பட்டு, "தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார்" (எபிரெயர் 2:7, 9). பூமிக்குரிய தமது ஊழியத்தின் முடிவில், இயேசு தமது சீஷர்களிடம், "நான் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டு பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்றார் (யோவான் 16:28).*

*நமது பரிபூரண பலியாக ஊழியஞ் செய்தபின், இயேசு மறுபடியும் பரலோகத்துக்குத் திரும்பி, இப்பொழுது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரேயர் 10:12)[13]. அவர் கிறிஸ்தவர்களின் பிரதான ஆசாரியனாகவும் மத்தியஸ்தராகவும் பணியாற்றுகிறார் (எபிரெயர் 2:17, 18; 4:14-16; 8:1). நேரம் வரும்பொழுது அவர் மறுபடியும் வந்து தம்முடையவர்களை கூட்டிக் கொண்டு போய் நித்தியத்துக்கும் அவர்களோடிருப்பார் (காண்க யோவான் 14:3; 1 தெசலோனிக்கேயர் 5:9, 10; 2 தீமோத்தேயு 2:10, 11).*

## முடிவுரை

*"கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்?" (மத்தேயு 22:42). இந்தக் கேள்வி வெறும் கற்பித்தல் வகையில் கேட்கப் பட்டதல்ல. இதற்கு நீங்கள் அளிக்கும் பதிலில் தான் இப்பொழுது உங்கள் வாழ்வை எப்படி வாழ்வீர்கள் என்றும் எங்கே உங்கள் நித்தியத்தை செலவிடுவீர்கள் என்பதையும் தீர்மானிக்கும். கிறிஸ்து உங்களுக்காக ஆயத்தம் பண்ணின பரலோகத்தின் நித்திய வாசஸ்தலத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ள ஏதுவான நம்பிக்கையைப் பெற அவர் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும்!*

*நீங்கள் கிறிஸ்தவனாக உண்மையிலேயே கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவராயின், அதற்கேற்றாற்போல் நீங்கள் செயல்பட வேண்டும்! கிறிஸ்துவுக்குள்ளான உண்மை விசுவாசிகள் லூக்கா 9:23- ல் சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தையின்படி கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருப்பார்கள்: " ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்." எல்லாவற்றிலும் நாம் அவருடைய சித்தத்தைச் செய்ய வகைதேட வேண்டும்!*

குறிப்புகள்

[1]எல்லா மாம்சமும் தீமையானது எனும் உபதேசம் ஆத்ம அறிவைப் பெற்றிருப்பதாகத் தங்களைக் கூறிக் கொள்வோரின் கொள்கை ஆதிசபையை பாதித்தது. [2]இப்படிப்பட்ட கண்ணோட்டம் கிரேக்கப் பதமான (*dokeo ē*) Docetism எனும் வார்த்தையில் அழைக்கப்படுவது, தோற்றம் எனும் பொருளுடையது. [3]வார்த்தை மாமிசமாகி வந்தது என்பது கிறிஸ்துவின் "அவதாரத்தைக்" குறிப்பிடும் தெய்வீக வார்த்தையைக் குறித்த உபதேசம். [4]Jim Smeal, *Study Guide for DC 301V, Systematic Christian Doctrine Videotape Course* (Florence, Ala.: Heritage Christian University, n.d.), 79. [5]1 தீமோத்தேயு 2:5 ல் "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்து முப்பது ஆண்டுகளுக்கு முன்பே பரமேறிச் சென்றிருந்தாலும் பவுல் அவரை மனுஷன் என்று குறிப்பிடுகிறார். [6]இந்தப் பாடத்தில் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதற்கான காரணங்களை நாம் அறிய அக்கறை காட்டுவதில்லை, அவர் உரிமையுடன் வாதிட்டிருந்தாலும், திருமறை அவர் தெய்வீகம் நிறைந்தவர் என்று போதிக்கிறதை மட்டும் கவனம் செலுத்துகிறோம். திருமறை சொல்வது உண்மைதான் என்பதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன. See Hugo McCord, "The Inspiration & Authority of the Bible," *Truth for Today* (April 2000), and Hugo McCord, "Jesus Christ, the Divine Son of God," *Truth for Today* (May 2000) available online at www. biblecourses.com. [7]பூமியில் கிறிஸ்து இருந்தபோது, தெய்வீக அதிகாரத்துக்குரிய சில காரியங்களை விட்டு விட்டார் (பிலிப்பியர் 2:6, 7) - உதாரணமாக, இனியும் அவர் சர்வ வியாபியாய் இராமல், ஆனால், தமது மனுஷீக சரீரத்தில், ஒரு நேரத்தில் ஒரே இடத்தில் மட்டுமே இருக்கக் கூடிய ஜீவியாக இருந்தார். ஆயினும், பிற தெய்வீகக் குணாதிசயங்களைத் தம்மோடு கொண்டிருந்தார். தமது தெய்வீக வல்லமையையும், தெய்வீக ஞானத்தையும் அவ்வப்பொழுது வெளிப்படுத்தினர். ஆகையால் - அவர் பூமியில் இருந்த நாட்களில் - இன்னமும் அவர் தெய்வீக வார்த்தையாக இருந்தார் - என்பதைக் காணுகிறோம், தேவத்துவத்தின் இரண்டாம் நபராகக் காண்கிறோம். [8]நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்வதன் முக்கியத்துவம் குறித்து மத்தேயு 10:32, 33; ரோமர் 10:9, 10 ஆகிய வசனங்களைக் காண்க. [9]"மேசியா" என்பது எபிரெய வார்த்தையான *mashiach* என்பதன் பதம் இதன் உண்மையான நேரடிப் பதம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்." கிரேக்க மொழியிலும் இதற்குச் சமமான, "அபிஷேகம் பண்ணப்பட்டவர்," "கிறிஸ்து" (கிறிஸ்டோஸ்) எனும் அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், இராஜாக்கள் ஆகியோர் பழைய ஏற்பாட்டில் அபிஷேகம் பண்ணப்பட்டனர். "இயேசு" என்பது கிறிஸ்துவின் தனிப்பட்ட பெயர் (மத்தேயு 1:21); "கிறிஸ்து" என்பது அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் அல்லது பதவிப் பெயர். ஆகிலும், இது அவருடைய தனிப்பட்ட பெயராகப் பயன்படுத்தப் பட்டது (இயேசு கிறிஸ்து என்றோ கிறிஸ்து இயேசு என்றோ பயன்படுத்தப்பட்டது), இது "இயேசு" என்று பெயர் வைத்திருந்த நபர்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும் படியாக இருந்திருக்கலாம் (உதாரணமாக நடபடிகள் 13:6 ஐக் காண்க). [10]புதிய ஏற்பாட்டில் (கிரேக்க குரியோஸ் என்னும் வார்த்தை) "ஆண்டவன்மார்கள்" அல்லது "எஜமானர்கள்" அல்லது "ஆளுகை செய்வோர்" ஆகியோருக்கு பயன்படுத்தப்பட்டது (மத்தேயு 18:25 ஐக் காண்க). (இப்பதம் பிரிட்டிஷ் பார்லியமெண்ட்டில் "ஆண்டவன்மார்களின் வீட்டில்" என்ற தலைப்பில் இன்றும் பேசப்படுகிறது.) "கர்த்தர்" எனும் பதம் பெரும்பாலும் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தேவனே மேலான கர்த்தரும், எல்லாவற்றையும் ஆளக்கூடியவருமாய் இருக்கிறார்.

*[11]"இராஜாதி இராஜா" என்பது "மகாராஜாவையும்," "கர்த்தாதி கர்த்தர்" என்பது மகத்தான ஆண்டவரையும் பொருள்படுத்துகிறது. [12]லூக்கா 2:11; யோவான் 4:42; நடபடிகள் 5:31; 13:23; தீத்து 1:4; 1 யோவான் 4:14 ஆகிய வசனங்களையும் காண்க. [13]1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 1:3, 13; 12:2; எபேசியர் 1:19, 20; கொலோசெயர் 3:1; 1 பேதுரு 3:22 ஆகியவைகளையும் காண்க.*